27th March 1969] [Thiru S. Raghavanandam]

Then the other amendment should provide for giving benefit even to a single worker employer. By a Government Order they have exempted shops employing one or two persons. It is applicable to only such of those shops, commercial establishments and restaurants employing less than three. Such a Government Order need not be issued and the persons employed on contract basis for a fixed period should come within the purview of Section 41 of the Act. I hope the Hon. Minister will bear these suggestions in mind while preparing the amending Bill.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, துவக்கத்திலேயே சொன்னேன். அங்கத்தினர் பிரேரேபித்த எல்லா திருத்தங்களையும் ஏற்றுக் கொள்கிறோம் என்பது அல்ல. பிரேரேபித்த கருத்துக்கள் அரசாங்கத்தின் நினைவில் இருக்கும் என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். பாக்கி இருக்கிற விவரங்களை உள்ளே புகுந்து விவாதிக்காமல், இப்போது இந்த திருத்தம் தேவையில்லை, அரசாங்கம் திருத்த மசோதா கொண்டுவர இருக்கிறது என்று சொல்லி இதை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

The Bill was, by leave, withdrawn.

## (ii) RESOLUTIONS.

### (1) SERVICE RIGHTS OF TEACHERS.

MR. CHAIRMAN: Now we take up Resolutions. The first Resolution was discussed in part on the last non-official day. I think five or six members have already spoken on the Resolution. If any other member wants to speak, he may do so now, before the Hon. Minister replies to the debate. I find seven hon. Members have taken part in the discussion the other day, namely, the Mover of the Resolution, Thiruvalargal Rajah Iyer, G. Krishnamoorthy, Thangapandian, V. Isvarmurti, S. Jayarama Reddiar and Saw Ganesan.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** தலைவர் அவர்களே, ஒரு சந்தேகம். இந்த தீர்மானத்தை நான் பிரேரேபிக்கிற நேரத்தில் கல்வி அமைச்சராக இருந்தவர்கள் இப்போது மாறி இருப்பதால் சுருக்கமாக அந்தக் கருத்தைச் சொல்வதற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மிஸ்டர் சேர்மன் :** பிறகு சொல்லலாம், வேண்டிய அவகாசமிருக்கிறது.

It is not the hon. Member's turn now. If no other hon. Member is speaking, I shall call the Hon. Minister to reply to the discussion. The Hon. Minister. 6-00 p.m.

**மாண்புமிகு திரு செ. மாதவன் :** தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் சந்தேகம் ஏதேனும் மீண்டும் கேட்க வேண்டுமென்று இருந்தாலும் பின்னால் வாய்ப்பு இருக்கிற காரணத்தால் நான் பதில் சொல்லத் தொடங்குகிறேன். இந்தத் தீர்மானத்தினுடைய நோக்கத்தை. அரசாங்கம் மனதாரப் பாராட்டுகிறது. வரவேற்கிறது. தனியார் துறையில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்குத் தேவையான பாதுகாப்பு கல்லூரியிலும், பள்ளிகளிலும் வேண்டுமென்ற கருத்தை அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டப்படி தனியார் நடத்துகிற பள்ளிகளை எந்த அளவுக்கு நாம் கட்டுத்திட்டத்திற்குக் கொண்டுவரலாம் என்பது பரிசீலிக்க வேண்டிய செய்தியாகும். **இன்றைக்குக் கூட தனியார் பள்ளியில் பணியாற்றுகிற ஆசிரியர்**

[திரு. செ. மாதவன்] [27th March 1969

களைப் பற்றிய விதிமுறைகள் நம்மிடத்தில் இருக்கின்றன. கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு பல்கலைக் கழகம் விதிமுறைகளை வகுத்திருக்கிறது. ஆனால் இருக்கிற விதிமுறைகளை மீறுவதற்கு தனியார் நிர்வாகத்திற்கு வாய்ப்பு இருக்கிறது. அப்படி மீறினால் நாம் நடவடிக்கை எடுப்பதில் முழுமையாக வெற்றி பெற முடியவில்லை என்ற கருத்தை நாம் பரிசீலிக்கவேண்டும். இந்தக் கருத்தின் அடிப்படையில் இன்றைக்கு ஆசிரியர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் தொல்லைகள் ஏற்படுகின்றன என்ற செய்திகள் அடிக்கடி அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. அதை அடிப்படையாக வைத்து அரசாங்கம் பரிசீலித்து, நேற்று இங்கே நான் அறிவித்தது போல உடனடியாக அரசாங்கம் முடிவெடுத்துச் சட்டமோ, விதியோ, ஆணையோ பிறப்பிப்பதற்குப் பதிலாக இவைகளைப் பரிசீலித்து, ஒரு முடிவெடுக்க ஒரு குழு அமைத்து அந்தக் குழு கூறும் கருத்துக்களின் அடிப்படையில் நாம் மாற்றங்கள் செய்யலாம் என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது. நான் ஏற்கனவே இங்கே அறிவித்திருக்கிறேன். அந்தக் குழுவிலே எல்லாத் தரப்பினரும் கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்புக் கொடுத்து அந்த அடிப்படையிலே நாம் அதை இந்த மன்றத்தில் கொண்டுவந்தால் நல்லது என்று கருதுகிறேன். காரணம், இப்போதும் சில சட்டங்கள் இருக்கின்றன. நம்முடைய விதிமுறையில் ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்து நீக்கினால் அவர் மேல் முறையீடு அப்பீல் அரசாங்க அலுவலருக்கு செய்யலாம் என்றிருக்கிறது. கல்லூரிகளைப் பொறுத்தவரையில் பல்கலைக் கழகத்திற்கு அப்பீல் செய்யலாம். நாம் சில சந்தர்ப்பங்களில் தலையிட்டு நிர்வாகம் செய்தது தவறு என்று உத்தரவு போடுகிறோம். ஆனால் அந்த உத்தரவை நிறைவேற்ற முடியாத நிலைமை இருக்கிறது. அந்தக் குறைதான் இப்போது நம்மிடத்தில் உள்ளது. சில சந்தர்ப்பங்களில் நிர்வாகம் தவறான வழியில் சென்று பள்ளி நடத்த முடியாத அளவுக்கும் ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் போராட்டம் நடக்கும் நிலைமையைப் பல இடங்களில் பார்க்கிறோம். இரண்டு நாட்களுக்கு முன்னால் மதுரைக்குச் சென்றிருந்தபோது சில பிரச்னைகளை அறிய முடிந்தது. நிர்வாகம் சில ஆசிரியர்கள்மீது அவதூறு வழக்கு நீதிமன்றத்தில் போட்டிருப்பதாக என்னிடத்தில் ஆசிரியர்கள் வந்து சொன்னார்கள். ஆசிரியர்கள் அந்த நிர்வாகத்தைப் பற்றி அரசு அலுவலரிடம் குறை சொன்னார்கள் என்ற காரணத்தை அடிப்படையாக வைத்து வழக்காடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். பள்ளியில் சம்பளம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. நிர்வாகம் ஒத்துழைக்காவிட்டால் அரசாங்கம் நேரிடையாகச் சம்பளம் கொடுக்கமுடியுமா என்றால், அதற்கு இயக்குநர் அளவில் ஆணை பிறப்பிக்கப்படவேண்டும். அதற்கு காலதாமதமாகும் என்றார்கள். ஒரு பள்ளியில் ஆசிரியர் தவறு செய்தார் என்று நிர்வாகம் நீக்கிவிட்டது. அரசு அலுவலருக்கு அப்பீல் செய்து அப்படி நீக்கியது தவறு என்று முறையிட்டார்கள். அதைப் பரிசீலித்து அப்படி நீக்கியது தவறு என்று அரசு ஆணைபிறப்பித்தது. ஆனால் அதை நிறைவேற்றாமலும் அந்த ஆசிரியருக்கு வேலை கொடுக்காமலும் அந்த நிர்வாகம் இருக்கிறது. அவருக்கு பதிலாகப் போடப்பட்டவர் அரசாங்கம் போட்ட ஆணை தவறோ சரியோ இடைக்காலத்தில் இரண்டு மூன்று வருஷம் வேலை பார்த்துவிட்டேன், அந்தச் சம்பளம் வேண்டுமென்று கேட்கிறார். வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர் "நீங்கள் போட்ட உத்தரவுக்கு நிர்வாகம் மதிப்பு கொடுக்காவிட்டால், அதற்கு நான் பொறுப்பாக முடியாது. உத்தரவு போட்ட நாளிலிருந்து வேலையில் இருப்பதாகக் கொண்டு சம்பளம் கொடுக்கவேண்டு"மென்று கேட்கிறார். இப்படிப்பட்ட தவறுகளைப் போக்குவதற்கு எப்படி முடிவு எடுக்கலாம் என்று ஆலோசித்து வருகிறோம். இந்த மன்றத்தில் கூட கனம் அங்கத்தினர் கேள்வி கேட்டபொழுதும் பள்ளியை நடத்துகிற நிர்வாகி கையாடல் செய்த குற்றத்திற்காக ஒன்றரை ஆண்டு காலம் தண்டனை பெற்றும் கூட அதைக் காரணமாகக் கூறி அவரை நிர்வாகத்திலிருந்து நீக்குவதற்கு விதிமுறையில் இடமில்லை என்று நான் பதில் சொன்னபோது எனக்கே சங்கடமாயிருந்தது.

27th March 1969] [திரு. செ. மாதவன்]

ஆகவே இந்தக் குறைகளை நீக்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்பதில் கனம் அங்கத்தினர் தீர்மானத்திற்கு முழு ஆதரவு தருவதற்கு விரும்புகிறேன். அதை எப்படிச் செய்வது என்பதைப் பற்றித்தான் விரிவாகப் பரிசீலிக்க வேண்டும். இப்படிச் செய்யும்போது பணச் செலவு அரசாங்கத்திற்கு வருமா என்பதைக் கவனமாகப் பார்க்கவேண்டும். செலவு வரும் சூழ்நிலை இருந்தால் பரிசீலித்துத் தான் முடிவு எடுக்க முடியும். பணச் செலவு இல்லாமல் விதி முறைகளை ஒழுங்கு படுத்து வதன் மூலம் ஆசிரியர்கள், நிர்வாகம், அரசு மூன்றும் ஒன்றாக இணைந்து செயல்படுவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதால் இந்த தீர் மானத்தின் பொருளை ஆதரித்து, ஒரு குழு அமைக்கவிருப்பதால், கனம் அங்கத்தினர் அவர்கள் இதனை வற்புறுத்த வேண்டாமென்றும், குழுவுக்கு ஒரு முடிவெடுக்க சந்தர்ப்பம் தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு எம். சங்கரலிங்கம் பிள்ளை :** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர் கள் நான் தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசியதை விட தீர்மானத்தின் தத்துவத்தை மிக உணர்ச்சிபூர்வமாக வரவேற்று, குழு அமைத்து யோசித்து விரைவில் முடிவு காண்பதற்கு ஒத்துக்கொண்டதால் நான் இந்தத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை தற்போது. அதே சமயத்தில் நியமிக்கப்படும் குழு ஆலோசனை செய்து முடிவெடுக்கவேண்டிய ஒன் றிரண்டை மாத்திரம் குறிப்பிட்டு விட்டு நான் இந்தச் தீர்மானத்தை திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

என்னுடைய தீர்மானத்தில் எந்த நிதி ஒதுக்கீடும் இல்லை. ஆனால் நீதி ஒதுக்கீடு தான் கேட்கிறோம். அமைச்சரவர்களும் ஒப்புக்கொண்டார்கள். ஆகையினால் நிதி ஒதுக்கீடு வரும் என்று நினைக்கவில்லை. நேற்று வினாவுக்கு அவர்கள் பதில் சொல்லும்போது மதுரை லேபர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியரும் மற்ற ஆசிரியர்களும் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள், நீக்கினது தவறு என்று ஏன் உத்தரவு பிறப்பிக்க வில்லை ? என்று பெரிய கல்வி அதிகாரியைக் கேட்டபோது அவர்கள் " ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் ஏற்படவேண்டிய ஒப்பந்தமே அந்தப் பள்ளியில் நடைபெறவில்லை, அதனால் ஆசிரியர்களை எப்படிப் பாதுகாக்க முடியும் ? " என்று கேட்டார்கள். ஒரு ஆசிரியர் வேலைக்கு வந்துவிட்டால் ஒரு ஆண்டு முடிந்தவுடன் இரண்டாம் ஆண்டு வேலைக்கு வருகிறார் என்றால் அவர் மீது எந்த விதமான அதிருப்தியும் வேலைத் தகராறும் இல்லை என்பது பொருள். இரண்டாவது ஆண்டு முடிந்து விட்டால் அவர் நல்ல வேலைசெய்கிறார் என்று நிர்வாகம் ஒப்புக்கொள் கிறது என்று பொருள். மூன்றும் ஆண்டு ஒப்பந்தம் செய்யாமல் இருந் தால் அந்த ஒரு காரணத்தைக் காட்டியே நிர்வாகம்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இங்கு ஆசிரியர்களைப் பாதுகாக்கவேண்டிய அதிகாரிகள் " அந்த ஆசிரியர்கள் ஒப்பந்தம் செய்யவில்லையே ; அந்த ஆசிரியர்களை எவ்வாறு பாதுகாப்பது முடியும் ? " என்று கேட்பது வியப்பாக இருக்கிறது. அமைச்சர் அவர்கள் இப்படிப் பல இடங்கள் இருப்பதாக சுட்டிக்காட்டினார் கள். திருவல்லிக்கேணி கெல்லெட் உயர்நிலைப் பள்ளியில் பல ஆசிரியர் கள் தொல்லைக்குள்ளாகி, அவர்கள் ஆசிரியர்கள் சங்க சார்பில் முத லமைச்சரிடத்தில் கொடுத்த மனுவை அச்சிட்டு அனுப்பி இருக்கிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு, இவ்வாறு நிலைமை வருந்தத்தக்கதால் நிர்வாகிகள் மத்தியில் ஆசிரியர்களின் அவல நிலை இருக்கிறது. தனியார் பள்ளி ஆரம்பிக்க அனுமதித்த காலத்தில், சமுதாயத்தில் உயர்நிலையில் உள்ளவர்கள் தங்கள் குழந்தைகள் போல் பிற குழந்தைகளுக்கும் கல்வி பயிற்றுவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆரம்பித்தார்கள். ஆகவே பள்ளி நிர்வாகிகளை மதிப்புக் குறைவாக நடத்தக்கூடாது ; அவர்களைத் தண்டிக்கும் சட்டங்கள் ஏற்படுத்தக் கூடாது என்று அன்றைய சூழ் நிலையில் வெள்ளைக்கார அரசாங்கம் அதை விட்டு விட்டது. அதே சட்டம் இன்றுவரை இருக்கிறது. இப்போது அரசு அதிகம் மானியம் கொடுக்கிறது. பள்ளிக்கூடம் கட்ட, மான்யம் ஆசிரியர்களுக்கு சம்பளம் இன்னும் பல மானியம் கொடுக்கிறது. கல்வி நிலையங்கள் நடத்துவது தொழில் மாதிரி

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [27th March 1969

ஆகிவிட்டது. அரசு காலம் தாழ்த்தாமல் நேரடியாக ஈடுபட்டு உண்மையில் தவறு இழைக்கும் நிர்வாகத்தினரைத் தண்டிக்க அரசு ஏற்ற நடவடிக்கைகளைச் சட்ட திருத்தங்கள் இயற்ற வேண்டும். அப்படிப்பட்ட நிறுவனங்களில் நிர்வாகியை மாற்றினால் அவர் மகன் பெயரைப் போட்டுக் கொள்வார். இவர் தான் "Manager" மேனேஜராக இருப்பார். எனவே எந்தப் பள்ளிகளில் தவறிழைக்கப்படுகிறதோ, அரசாங்கப் பொதுப் பணம் கையாளப்படுகிறதோ, எந்த எந்தப் பள்ளியில் ஆசிரியர்கள் அவமிக்கப் பட்டு துன்புறுத்தப்படுகிறார்களோ, அந்தப் பள்ளி, அல்லது கல்லூரிகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை வரவேண்டும். நானே இந்த மன்றத்தில் பலமுறை சொல்லியிருக்கிறேன். நாகர்கோவிலில் இந்து காலேஜில் பல ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை சட்ட மன்ற உறுப்பினராக இருந்தும், ஆசிரியர் பிரதி நிதியாக இருந்தும், ஆசிரியர் நலனைச் சொன்ன ஒரே காரணத்துக்காக காரணம் காட்டாமலே வேலையிலிருந்து தள்ளி, மதுரை யூனிவர்சிடிலிருந்து 5 பேர் வந்து விசாரணை செய்து நிர்வாகம் தவறு செய்திருப்பதாகச் சொன்ன பிறகும், "நீங்கள் யார் கேட்க? கல்லூரியை அடைத்து ட்யூடோரியல் காலேஜ் நடத்தினாலும் இந்த ஆசிரியரை வேலைக்கு எடுக்க மாட்டோம்" என்று சொன்னார்கள். அப்படி பழி வாங்கப்பட்டவன் நான். அவர்களுக்கு மேலும் "கிராண்ட்" கொடுக்கிறோம் என்றால் ஆசிரியர்கள் எவ்வாறு பாதுகாக்கப்படுவார்கள் அவர்களுக்கு எதிராகக் கல்லூரி அமைத்து, அதற்கு முதல்வராக இருந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்கு எதிராக கல்லூரி அமைத்து "நீ லெக்சரர் வேலை இல்லை என்று சொன்னாய், பார், நான் முதல்வராக இருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டிருக்கிறேன். அவ்வளவு வசதி எத்தனை ஆசிரியர்களுக்கு இருக்கும்? கல்வியமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன். இப்படி வெளியேற்றப்பட்ட ஆசிரியர்கள் அவல நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அரசுக்கு மனுப்போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கடுத்த நிலைக்கு வராமல் ஆசிரியர்களை ஆசிரியர்களாகவே பணி புரியச் செய்ய, தக்க காலத்தில் பொறுப்பேற்றுச் சட்டம் செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு, அமைச்சரவர்கள் முயற்சியை ஆசிரியர்கள் சார்பில் பாராட்டிக்கொண்டு,—வாக்குறுதி அளிப்பது இயல்பு—மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் பலதடவை சொல்வார்கள். "சி.எஸ்." கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படாததைப் பற்றிச் சொல்வார்கள். வாக்குறுதி அளிப்பதோடு நின்றுவிடாமல்—ஒரே சமயத்தில் நிர்வாகத்தையும், ஆசிரியர்களையும், திருப்தி பண்ண முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது—இப்போது வேறு முயற்சியுடன் கல்வியையே தேசியமயமாக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆசிரியர்களுக்கு நாம் சம்பளம் கொடுக்கிறோம். நிர்வாகத்திற்கு கட்டிடம் கட்ட (Furniture) "பர்னிச்சர்" இதர சாமான்கள் வாங்க மானியம் கொடுக்கிறோம். எத்தனையோ தொழில் டிரான்ஸ்போர்ட் தேசியமயம் பண்ணிக்கொண்டிருக்கும் போது, தேசத்தை பண்பை வளர்க்கும் பள்ளிகளைக் கல்வியைத் தேசியமயமாக்கவும் அதன் மூலம் அரசாங்கத்தின் கல்விக் கொள்கை ஒரே போல் பரப்பி நல்ல கொள்கையை உருவாக்கவேண்டும். இதனை அமைச்சர் அவர்கள் விரைவில் உருவாக்கித் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆசிரியர்கள் சார்பில் நன்றி கூறி, தீர்மானத்தை திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். மாதவன் :** ஆசிரியர்கள் பற்றி முன்னரே கூறி விட்டேன். நாங்கள் அனுபவபூர்வமாக அனுபவித்தவர்கள். ஆதலால் இதைப்பற்றி சந்தேகப்பட வேண்டிய அவசியம் இல்லை. குழு அமைக்க தயார். கல்வியைத் தேசியமயமாக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதிலே கருத்து வேறுபாடு இருக்கிறது. இப்போதுகூட அரசாங்க கல்லூரிகளை விட, சிறந்த முறையில் நடைபெறும் தனியார் கல்லூரிகள்; பள்ளிகள் இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. சில மத ஸ்தாபனங்கள் கல்விக்காகவே தங்களை அர்ப்பணித்துக்கொள்பவர்களாக நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களை வேண்டாமென்று சொல்ல விரும்பவில்லை. அது அரசாங்கத்தின் கொள்கையில்லை என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கல்லூரிகளை எடுத்து நடத்துவது பற்றிச்

சொன்னார்கள். ஏற்கனவே இடைக்காலமாக பள்ளிகள், கல்லூரிகளை எடுத்துக் கொள்ளச் சட்டம் இருக்கிறது. அந்த சட்டம் போதவில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே அதை மாற்றி அமைத்து தவறு செய்யும் பள்ளிகளை அரசாங்கமே நிரந்தரமாக எடுத்து நடத்துவதற்கு அந்தச் சட்டத்திற்கு ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்கும், அதுபற்றி அரசாங்கச் சட்ட இலாகா பரிசீலித்து வருகிறது. அது எந்த அளவுக்கு அரசமைப்பு சட்டத்துக்கு உட்பட்டுக்கொண்டு வர முடியும் என்பதைப் பரிசீலித்து அதற்கான முயற்சிகள் எடுக்க முடியும் என்று கருதுகிறேன்.

The Resolution, was by leave withdrawn.

## (2) BONUS TO TEACHERS.

Mr. CHAIRMAN : The next Resolution stands in the name of the hon. Member Thiru G. Krishnamoorthy, the Deputy Chairman. He may move the Resolution, get it seconded and then speak on the Resolution.

Thiru G. KRISHNAMOORTHY : Mr Chairman, Sir, first I seek your permission to speak from this seat. Secondly, Sir, there is an idea that a Member elected to the office of the Deputy Chairman cannot have as much freedom of speech as he had when he was a Member.

Mr. CHAIRMAN : I said the other day that from a talking place you were coming over to a non-talking place.

Thiru G. KRISHNAMOORTHY : I have seen, Sir, the former Deputy Chairman speaking. I think there is no restriction.

Mr. CHAIRMAN : The hon. Member can speak. He is not completely muffled.

Thiru G. KRISHNAMOORTHY : Sir, this Resolution that I have brought before the House, if accepted by the Hon. Minister and the Government . . . .

Mr. CHAIRMAN : He may formally move the Resolution, get it seconded, and then speak on it.

Thiru G. KRISHNAMOORTHY : Mr. Chairman, Sir, I move :

"This House recommends to the Government that teachers of all grades under all Agencies be paid at the end of each academic year 25 per cent of the total salary drawn by them during that year as Bonus".

Thiru M. SANKARALINGAM PILLAI : I second the Resolution, Sir.

Thiru G. KRISHNAMOORTHY : Sir, the word 'Bonus' may rather sound strange with regard to these institutions. The idea why I have worded this resolution like this is this. The teachers have been requesting for the appointment of a Second Pay Commission to revise their scales of pay. I note from the replies of